புதுச்சேரி அரசு

## புதுச்சேரி மாசுக் கட்டுப்பாடு குழுமம்

### சுற்றுச்சூழல் தகவல், விழிப்புணர்வு, திறன் மேம்பாடு மற்றும் வாழ்வாதாரத் திட்டம்

**சான்றிதழ் படிப்பு: சூரிய நிறுவன உதவி மேலாளர்**

திறன் இந்தியா இயக்கத்தின் ஒரு பகுதியாக மாண்புமிகு பிரதமர் அவர்களால், இந்திய அரசின் சுற்றுச்சூழல், வன மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகம் (MoEF&CC) வழியாக பசுமை திறன் மேம்பாட்டு திட்டம் (GSDP) நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.இந்தத் திட்டத்தின் கீழ், புதுச்சேரி மாசுக்கட்டுப்பாட்டு குழுவின் (PPCC) சுற்றுச்சூழல் தகவல், விழிப்புணர்வு, திறன் மேம்பாடு மற்றும் வாழ்வாதாரத் திட்ட (EIACP Hub) மையம் **“சூரிய ஆற்றல் நிறுவன உதவி மேலாளர்”** தலைப்பில் ஒரு சான்றிதழ் பயிற்சியை 22 டிசெம்பர் 2025 முதல் நடத்துகிறது.

இந்தப் பயிற்சியில் வகுப்பறை பாடங்களும் நடைமுறைப் பயிற்சிகளும் இடம்பெறும். இது சூரிய ஆற்றல் நிலையங்களை நிறுவுதல், இயக்குதல் மற்றும் பராமரித்தல் பற்றிய அடிப்படை அறிவை மேம்படுத்தும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. மேலும், தளப் பார்வைகள் மற்றும் செய்முறைப் பயிற்சிகள் மூலமாக பயிலாளர்கள் நேரடி அனுபவத்தையும் பெறுவார்கள். இந்தப் பயிற்சி, பங்கேற்பாளர்களின் தொழில் முனைவுத் திறனையும் வேலைவாய்ப்பிற்கான தயார்சியையும் உயர்த்தும்.

இப்பயிற்சி வகுப்பிற்கு கட்டணம் ஏதும் இல்லை. புதுச்சேரி பகுதியைத் தவிர்ந்த பிற இடங்களிலிருந்து பங்கேற்கும் தேர்ந்தெடுக்கப்பட்ட பயிலாளர்களுக்கு இலவச தங்கும் வசதி மற்றும் உணவு வழங்கப்படும். தகுதியுள்ள விண்ணப்பதாரர்கள் மட்டுமே, தேவையெனில் நேர்முகத் தேர்வின் மூலம் தேர்வு செய்யப்படுவார்கள்.

63 நாட்கள் நடைபெறும் இச்சான்றிதழ் பயிற்சி வகுப்பு 22 டிசம்பர் 2025 அன்று தொடங்க திட்டமிடப்பட்டுள்ளது. ஆர்வமுள்ளவர்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ள கூகுள் படிவத்தின் (Google Form) இணைப்பின் மூலம் விண்ணப்பிக்கலாம்.: https://forms.gle/4A1N6SJP22Rd4eqK8

**கல்வி தகுதி:** தொடர்புடைய துறையில் பட்டப்படிப்பு (UG) / டிப்ளமா (Diploma) / ஐ.டி.ஐ (ITI) முடித்திருக்க வேண்டும் மற்றும் குறைந்தது 1 ஆண்டு தொடர்புடைய பணி அனுபவம் இருக்க வேண்டும் அல்லது NSQF Level 4-இல் முந்தைய தொடர்புடைய தகுதி மற்றும் குறைந்தது 3 ஆண்டு தொடர்புடைய பணி அனுபவம் இருக்க வேண்டும்**.**

**வயது வரம்பு:** 18 வயது மற்றும் அதற்கு மேல்.

**விண்ணப்பிக்கும் தேதி:** 10.11.2025 **விண்ணப்பிக்க கடைசி தேதி:** 10.12.2025.

**பயிற்சி கால அளவு:** 63 நாட்கள் **இடங்கள் எண்ணிக்கை:** 30 (முப்பது)

**பயிற்சி இடம்:** டாக்டர் அப்துல்கலாம் அறிவியல் மையம் மற்றும் கோளரங்கம், லாஸ்பேட்டை, புதுச்சேரி.

**மேலும் தகவலுக்கு:** 0413 – 2201256, 8344499914, 9789702745 என்ற தொலைபேசி எண்ணை காலை 10.00 முதல் மாலை 5.30 மணி வரை தொடர்பு கொள்ளவும் அல்லது envis@py.gov.in / envispdy@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்பவும்.

***